# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# Ang Mo Kio Tamil Methodist Church

## 25th ஆகஸ்ட் / August 2024 ஞா யிறு ஆராதனை

| | |
|---|---|
| **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. கோஹிலா**<br>Mrs. Kohila |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. கோஹிலா**<br>Mrs. Kohila |
| **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### என்முன்னே மேய்ப்பர் போகிறார்

*1. என்முன்னே மேய்ப்பர் போகிறார்;*
*நல் மேய்ப்பராகக் காக்கிறார்;*
*ஓர்காலும் என்னைக் கைவிடார்;*
*நேர் பாதை காட்டிப் போகிறார்.*

***முன் செல்கின்றார்! முன் செல்கின்றார்!***
***என் முன்னே சென்று போகிறார்!***
***நல் மேய்ப்பர் சத்தம் அறிவேன்,***
***அன்போடு பின்சென்றேகுவேன்***

*2. கார் மேகம் வந்து மூடினும்,*
*சீர் ஜோதி தோன்றி வீசினும்,*
*என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்;*
*என்றைக்கும் முன்னே போகிறார்.*

*3. மெய்ப் பாதைகாட்டி! பின்செல்வேன்,*
*தெய்வீக கையால் தாங்குமேன்;*
*எவ்விக்கினம் வந்தாலும் நீர்*
*இவ்வேழைமுன்னே போகிறீர்.*

*4. ஒப்பற்ற உம் காருணியத்தால்*
*இப்பூமி பாடு தீருங்கால்,*
*நீர் சாவை வெல்லச் செய்குவீர்,*
*பேரின்பம் காட்டி முன்செல்வீர்.*

| | |
|---|---|
| **மாறி வாசித்தல் *34*ம் ஞாயிறு**<br>"சங்கீதம் 103"<br>**"**கர்த்தருக்கு புதுப்பாட்டைப் பாடுங்கள்**"**<br>Psalter Reading – "Psalm 103" | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **சிறப்புப் பாடல்**<br>Special Song | **பாடகர் குழு**<br>Choir |
| **காணிக்கைப் பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### காக்கும் கரங்கள் உண்டெனக்கு

*1. காக்கும் கரங்கள் உண்டெனக்கு*
*காத்திடுவார் கிருபையாலே*
*அல்லேலூயா பாடிப் பாடி*
*அலைகளை நான் தாண்டிடுவேன்*

***நம்புவேன் இயேசுவை (4)***

*2. நித்தனைகள் போராட்டம் வந்தும்*
*நீதியின் தேவன் தாங்கினாரே*
*நேசக் கொடி என் மேல் பறக்க*
*நேசருக்காய் ஜீவித்திடுவேன்*

*3. கன்மலைகளை பெயர்க்கும்படியாய்க்*
*கர்த்தர் என்னைக் கரம் பிடித்தார்.*
*காத்திருந்து பெலனடைந்து*
*கழுகு போல எழும்பிடுவேன்*

*4. அத்தி மரம் துளிர் விடாமல்*
*ஆட்டு மந்தை முதலற்றாலும்*
*கர்த்தருக்குக் காத்திருப்போர்*
*வெட்கப்பட்டுப் போவதில்லை*

| | |
|---|---|
| **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **திருமறைப் பாடம்**<br>Scripture Reading<br>***மத்தேயு 26 : 30 - 35***<br>Matthew 26 : 30 - 35 | **திரு.சாமுவேல் தேவானந்தன்**<br>Mr. Samuel Devanandan |
| **அருளுரை**<br>Sermon | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **அர்ப்பணகீதம்**<br>Offertory & Closing Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### காணாத ஆட்டின் பின்னே

***காணாத ஆட்டின் பின்னே கர்த்தர்***
***கண்ணீருடன் அலைந்தார்***
***அன்போடு உன்னை அழைக்கின்றாரே***

**இன்றே திரும்பி நீ வா**

*1. முள்ளும் புதரும் காடும் மலையும்*
*உள்ளம் உடைந்தேசு தேடுகின்றார்*
*சிற்றின்ப சேற்றினில் சிக்கினதால்*
*சாத்தான் வலையில் நீ சிறையாகினாய்*

*2. சுத்த இதயம் வேண்டாம் என்றெண்ணி*
*கர்த்தரின் அன்பை நீ சந்தேகித்தாய்*
*யோனாவைப்போல நீ போனாயல்லோ*
*ஏசுபரன் வாக்கு வெறுத்தாயல்லோ*

*3. என்னென்ன துன்பம் தொல்லைகள் வந்தும்*
*ஏசுவின் பாதை நீ விட்டோடாதே*
*நீதி நிறைந்த தம் கரங்களை*
*நீட்டி உன்னைத் தாங்கி பயம் நீக்குவார்*

*4. எத்தனை நேரம் உன்னை அழைத்தார்*
*இத்தனை காலம் நீ தள்ளலாமோ*
*கர்த்தரின் சித்தம் உன் வேளையிதே*
*கண்டு உணர்ந்து விரைந்தே நீ வா*

*5. துன்மார்க்கரெல்லாம் சன்மார்க்கரோடே*
*தேவ கோபாக்கினையால் மாள்வாரே*
*கர்த்தரின் பந்தியில் பங்கடைய*
*கண்ணீருடன் நீயோ அருள் வேண்டுவாய்*

**அறிவிப்புகள்**
Announcements

† ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation

***மத்தேயு 16 : 16 - 17***
Matthew 16 : 16 – 17

***16. சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.***
***17. இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.***

† ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

† ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

† ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing